Judicial Form No.53

(See Rule 43)

DEPOSITION OF WITNESS

(CHAPTER XXIII CODE OF CRIMINAL PROCEDURE )

மாவட்ட உரிமையியல் மற்றும் நீதித்துறை நடுவர் நீதிமன்றம், திருவெண்ணெய்நல்லூர்.

C.C. No. 151/2024

2025-ம் ஆண்டு ஆகஸ்ட் மாதம் 22-ம் தேதி வெள்ளிக்கிழமை குற்றம் முறையிடுபவரின் அ.சா. 4 -வது நபரின் வாக்குமூலம். (1969 ஆம் ஆண்டு 54-வது விதியின் ஏற்பாட்டின்படி) திரு. V. செல்வகோபால், Grade,III, Bench Clerk அவர்களால் உறுதிமொழி செய்யப்படுகிறது.

| | | | | | |
|---|---|---|---|---|---|
| அ.சா. | - | 4 | தொழில் | - | ஈ.பி (ஓய்வு) |
| பெயர். | - | மாணிக்கம் | வட்டம் | - | கண்டாச்சிபுரம் |
| த/பெ. | | அய்யாக்கண்ணு | சமயம் | - | |
| கிராமம் | - | முகையூர் | வயது | - | 67 |

22.08.2025

1 வது எதிரி ஆஜர். 2, 3 எதிரிகள் ஆஜரில்லை, 2, 3 எதிரிகள் தரப்பில் கு.வி.மு.ச. 317 ன் கீழ் மனு தாக்கல் செய்யப்பட்டு மனு அனுமதிக்கப்பட்டது.

**முதல் விசாரணை.**

1. நான் தற்போது முகையூரில் வசித்து ஈ.பி -ல் லைன் மேனாக இருந்து ஓய்வு பெற்று விட்டேன். அ.சா.1 ஐ தெரியும். எதிரிகளை தெரியும். சுமார் 10 ஆண்டுகளுக்கு முன்பு இரவு 09.00 மணியளவில் நான் வேலை முடித்துவிட்டு வீட்டிற்கு வந்த போது அ.சா.1 ற்கும், எதிரிகளுக்கும் சண்டை நடந்ததாக கேள்விபட்டேன். நான் சண்டையை நேரடியாக பார்க்கவில்லை. போலீசார் விசாரணை செய்யவில்லை.

**(அரசு தரப்பில் சாட்சியை பிறழ் சாட்சியாக கருத அனுமதி கோரியதில் அனுமதி வழங்கப்பட்டு சாட்சி அரசு தரப்பால் குறுக்கு விசாரணை செய்யப்படுகிறது.)**

1. கடந்த 30.10.2015 ம் தேதி மாலை 06.30 மணியளவில் எதிரி மாணிக்கம் பிரச்சனை உள்ள சந்தில் செங்கல்லை அடுக்கி வைத்திருந்தார் என்றாலும், அதை கேட்க சென்ற அ.சா.1 ஐ அவரின் கையை பிடித்து முறுக்கி அசிங்கமாக பேசினார் என்றாலும், பின்பு எதிரிகள் அ.சா.1 ஐ அசிங்கமாக பேசி கையால் அடித்தார்கள் என்றால் சரியல்ல. மேற்படி சம்பவத்தை நான் நேரடியாக பார்த்துவிட்டு சண்டையை மறித்தேன் என்றால் சரியல்ல. சம்பவத்தை

குறித்து போலீசார் விசாரணையில் தெரிவித்துவிட்டு தற்போது உண்மையை மறைத்து சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

# Judicial Form No.53

(See Rule 43)

# DEPOSITION OF WITNESS

(CHAPTER XXIII CODE OF CRIMINAL PROCEDURE )

மாவட்ட உரிமையியல் மற்றும் நீதித்துறை நடுவர் நீதிமன்றம், திருவெண்ணெய்நல்லூர்.

C.C. No. 151/2024

2025-ம் ஆண்டு ஆகஸ்ட் மாதம் 22-ம் தேதி வெள்ளிக்கிழமை குற்றம் முறையிடுபவரின் அ.சா. 5 -வது நபரின் வாக்குமூலம். (1969 ஆம் ஆண்டு 54-வது விதியின் ஏற்பாட்டின்படி) திரு. V. செல்வகோபால், Grade,III, Bench Clerk அவர்களால் உறுதிமொழி செய்யப்படுகிறது.

| | | | | | |
|---|---|---|---|---|---|
| அ.சா. | - | 5 | தொழில் | - | விவசாயம் |
| பெயர். | - | முருகன் | வட்டம் | - | கண்டாச்சிபுரம் |
| த/பெ. | | முத்துசாமி | சமயம் | - | |
| கிராமம் | - | முகையூர் | வயது | - | 60 |

22.08.2025

1 வது எதிரி ஆஜர். 2, 3 எதிரிகள் ஆஜரில்லை, 2, 3 எதிரிகள் தரப்பில் கு.வி.மு.ச. 317 ன் கீழ் மனு தாக்கல் செய்யப்பட்டு மனு அனுமதிக்கப்பட்டது.

**முதல் விசாரணை.**

1. நான் தற்போது முகையூரில் வசித்து விவசாய வேலை செய்து வருகிறேன். தற்போது என்னிடம் காட்டப்படும் பார்வை மசகரில் உள்ள 2 வது சாட்சி கையெழுத்து என்னுடையது தான் . மேற்படி கையெழுத்தை சுமார் 10 ஆண்டுகளுக்கு முன்பு மாணிக்கம் குடும்பத்திற்கும், தெய்வீகன் குடும்பத்திற்கும் நடந்த சண்டை சம்மந்தமாக சண்டை நடைப்பெற்ற 2 நாட்கள் கழித்து மாலை சுமார் 07.00 மணியளவில் சம்பவ இடத்தை பார்வையிட்டு விசாரணை செய்தார்கள். அவர்கள் விசாரணைக்கு நான் சாட்சியாக இருந்து அவர்கள் தயார் செய்த பார்வை மகசரில் சாட்சி கையொப்பம் போட்டேன். **பார்வை மசகரில் உள்ள 2 வது சாட்சி கையெழுத்து அ.சா.ஆ.3 ஆகும்**. போலீசார் விசாரணை செய்தார்கள்.

**எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை**

1. அ.சா.1 ன் கணவர் தெய்வீகன் எனக்கு என்ன உறவு முறை என்றால் சம்மந்தியின் மாமன் மகள். சம்பவம் நடந்ததாக சொல்லப்படும் இடத்திற்கு அருகில் எனக்கு பக்கத்தில் இடம் எதுவும் இல்லை என்றால் சரிதான். போலீசார் என்னிடம் கையெழுத்து கேட்ட போது

அதில் என்ன எழுதியிருந்தது என்று எனக்கு தெரியுமா என்றால் எனக்கு படிக்க தெரியாது. என்னிடம் படித்து காண்பித்தார்களா என்றால் இல்லை. கையெழுத்து மட்டும் போட சொன்னார்கள் போட்டேன் என்றால் ஆமாம்.

(Sd/-R.Senthilkumar)
D.M-cum-JM,
T.V.Nallur.